
## திராவிடத்தால் வாழ்கிறோம்

814

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

**குமரன்தாஸ்**

7

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# குறவஞ்சி : விளிம்பு நிலை மக்கள் வாழ்வும் அரசியலும்!





படங்கள் உதவி : ஞானம்

*1960* - இல் மேகலா பிக்சர்ஸ் தயாரித்து, கலைஞர் கதை திரைக்கதை வசனம் எழுத ஏ.காசிலிங்கம் இயக்கி வெளிவந்த, மிகவும் குறிப்பிடத்தகுந்த திரைப்படமாகும், ‘குறவஞ்சி’. கலைஞரின் 75 திரைப்படங்களில் இது மிகவும் தனித்து வமான ஒரு திரைப்படம் என்றே சொல்ல வேண்டும். கலைஞரின் நன்றியுணர்ச்சியை வெளிப்படுத்தும்விதமாக ‘கலைவாணர் நினைவுடன்’ என்கிற வாசகத்துடனும் ஆளுயர கலைவாணர் புகைப்படத்துடனும் படம் தொடங்குகிறது. இப்படத்தில் சிவாஜி கணேசன் சாவித்திரி, மைனாவதி, ஓ.ஏ.கே.தேவர், ஆர்.பால சுப்ரமணியம், எம்.ஆர்.சந்தானம், ராதாபாய், குல தெய்வம் ராஜகோபால் ஆகியோர் முக்கிய வேடத்தில் நடித்துள்ளனர்.

### அரசியல் புரட்சியும் சமூக மாற்றமும்!

இன்பபுரி பேரரசர் தென்பாண்டி கோ, தனது நாட்டின் எல்லையோரப் பகுதியை ஆட்சி செய்ய தனது தம்பி முகாரியை நியமிக்கிறான். அங்கு, சூழ்ச்சி நிறைந்த மந்திரி இமயாவுடன் சேர்ந்து எல்லையோர நாட்டில் கொடுங்கோல் ஆட்சி செய்கிறான் முகாரி. அந்த ஆட்சிக்கு எதிராக, அரசக் குடும்பத்தைச் சேர்ந்த சமூகப் பற்றுகொண்ட கதிரவன், மாறுவேடத்தில் மக்களிடம் சென்று அரசியல் பிரச்சாரம் செய்து வருகிறான்.

அப்போது, இன்பபுரி சாம்ராஜ்யத்தின் மணிவிழா கொண்டாட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. அதை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யும் கதிரவனை, வீரர்கள் கைது செய்து இன்பபுரி அரசரின் முன் கொண்டு போய் நிறுத்துகின்றனர். விசாரணையில், அவரின் தம்பி முகாரியின் ஆட்சியில் எல்லைப்புற மக்கள் துன்பமும் துயரமும் அடைவதைக் கேட்டு, அந்த மக்களைக் காக்கும் பொறுப்பை கதிரவனிடமே ஒப்படைக்கிறார் பேரரசர்.

கதிரவன் மக்களிடம் அரசியல் பேசி அணிதிரட்டி, பல போராட்டங்களுக்குப் பின்னர், முகாரியையும், இமயாவையும் ஆட்சியில் இருந்து நீக்குவார். இதற்கிடையில் கதிரவனின் புரட்சிகரமான உள்ளம், ஏழை மீனவ குலப்பெண் பொன்னியை விரும்புகிறது. இருவரும் காதலிக்கின்றனர். கதிரவனை அரசகுமாரியும் விரும்புவார்.

‘குறவஞ்சி’ திரைப்படம் முழுக்க முழுக்க அடித்தட்டு மக்கள் நலன் பேசும் அரசியல் திரைப்படம். குறிப்பாக, எல்லைப்புற விளிம்பு நிலை மக்களான மீனவர்களை, முக்கிய கதைமாந்தர்களாக, இந்தத் திரைப்படம் கொண்டிருக்கும். அவர்கள் மீது சமவெளி ஆட்சியாளர் நடத்தும் ஒடுக்குமுறையை எதிர்த்து, அறவழியில் அரசியல் விழிப்புணர்வூட்டி, மக்கள்



எழுச்சியை உருவாக்கும் காட்சிகளைக் கொண்ட திரைப்படமாக இருப்பதைக் காணும்போது, ஒருவேளை அன்றைய (1956) குமரி மாவட்ட எல்லைப் போராட்டக் காலத்தில் மக்கள் பட்ட துன்பத்தினை மனதில் கொண்டு இப்படத்தின் கதை, திரைக்கதை வசனத்தை (1960-இல் ) கலைஞர் எழுதியிருப்பாரோ என்று சந்தேகம் எழுகிறது.

படத்தின் தொடக்கக் காட்சியிலேயே ஒரு மணப்பெண்ணை படைவீரர்கள் கடத்திக் கொண்டு போய், மந்திரி இமயாவின் அந்தப்புரத்தில் அடைத்து வைக்கிறார்கள். காப்பாற்ற வரும் மணமகனை இமயா கொலை செய்கிறான். மணமகனின் பிணத்தை வீதியில் வீசும் படைவீரர்களின் முகத்தில் பைத்தியக்காரன் வேடமிட்ட கதாநாயகன் கதிரவன் (சிவாஜி) சாணியால் அடித்து விரட்டுவதுடன், கதை விறுவிறுப்பாகத் துவங்குகிறது. படத்தின் தொடக்கம் முதல் இறுதிக் காட்சி வரை கலைஞரின் வசனம் நெருப்புத் துண்டங்களாக வந்து விழுந்து ஆட்சியாளர்களையும், அவர்கள் காப்பாற்றத் துடிக்கும் ஜாதியத்தையும் சுட்டு எரிக்கிறது.

### நெருப்பு உரையாடல்

இன்பபுரியின் மணி விழாவை எதிர்த்து, கைதியாக சிவாஜி கொண்டு வந்து நிறுத்தப்படும் காட்சியில் தெறிக்கும் வசனங்களைப் பார்க்க லாம்...

*மன்னன் : யார் நீங்கள்?*

*கதிரவன்: எல்லைப்புறம்.*

*மன்னன்: எல்லைப்புறத்தில்?*

*கதிரவன்: எல்லோரும் இப்படித்தான், இவர் ராசா இவர் மந்திரி*

*மன்னன் : என்ன உளறுகிறாய், நீதானே மணி விழாவை மறுத்துப் பேசியவன்?*

*கதிரவன்: மறுத்தேன் அது மட்டுமல்ல, மனிதாபிமானமற்ற செயலென்றும் கூறினேன்.*

*மன்னன்: காரணம்?*

*கதிரவன் : நெருப்புக்கு ஏன் பஞ்சுமெத்தை? இந்த நீதியற்ற ஆட்சிக்கு ஏன் மணிவிழா?*

*மன்னன்: நீதியற்ற ஆட்சியா?*

*கதிரவன் : ஏன் திகைக்கிறீர்? எல்லைப் புறத்தின் வீதியிலே விழும் பிணங்களைப் பார்த்தால், அவைகளை அணைத்துக் கொண்டு அலறித்துடிக்கும் அருமைத் தாய்மார்களைக் கேட்டால், பிஞ்சுமாங்காய் பிளந்தது போல் கண்கள் படைத்த கொஞ்சும் மொழி மாதர் தம் கற்பைப் பறி கொடுத்து விட்டு, எஞ்சிய உயிரையும் ஏரி, குளங்களில் கரைத்து விடுகிறார்களே அந்தக் காட்சியை கண்ணாரக் கண்டால் நடக்கும் ஆட்சிக்கு நாமதேயம் என்ன வென்று பட்டவர்த் தனமாகத் தெரிந்து விடும்.*

*மன்னன்: எல்லைப் புறத்தில் இவ்வளவு கொடுமைகளா நடக் கிறது மந்திரியாரே?*

*கதிரவன் : மந்திரி யைக் கேளுங்கள் மந்திரியை... மாநகர் தன்னிலே மாதம் மும்மாரி மழை பொழிகிறதா என்று...*

*மன்னன் : எல்லைப்புறம் இங்கிருந்து நெடுந்தூரம் இருக்கிறது. அங்கு நடக்கும் செய்தி இன்பபுரிக்கு எட்டுவதில்லை.*

*கதிரவன்: இருதயத்துக்கும் காலுக்கும் எட்டாத தொலைவு என்று கூறி, காலில் வரும் புண்ணைக் கவனியாது விட்டால், பிறகு உயிருக்கே ஆபத்து மன்னவா, உயிருக்கே ஆபத்து.*

*இங்கே கும்மாளம் போடுகிறீர்கள் கொண்டாட்டம் நடத்துகிறீர்கள். விழாக் கொடி ஏற்றுகிறீர்கள் அங்கு விஷக்கொடி படர்கிறது. கருநாகம் சீறுகிறது. கடும்புலி பாய்கிறது. அடிக்கிறார்கள்... வலிக்கிறது என்று சொன்னால், கொன்று விடுகிறார்கள். வரி எடு என்று மிரட்டுகிறார்கள்... இல்லை யென்றால், இல்லாமலே செய்து விடுகிறார்கள். ஆண்டவன் ஏன் நமக்கு அழகைக் கொடுத்தான் என்று பெண்கள் கவலைப் படும் பிரதேசம் மன்னவா, எல்லைப்புறம். எத்தனைப் பிள்ளைக் கனிகளின் கழுத்துகள் கிள்ளி எறியப்பட்டிருக்கின்றன. அல்லிமலரின் தண்டுகள் போல் ஒடித்து எறியப்பட்ட கிள்ளை மொழிப் பாவையர் எத்தனை பேர். செந்தேனும் தினைமாவும் போல ஆகி விட்டோம். ‘செந்தமிழே அமுதே’ என வர்ணித்து ஊர்வலம் சென்றார், உடல் இரண்டாய் உயிர் ஒன்றாய் ஆகிவிட்ட மணமக்கள், அவர்தம் எண்ணக்கோட்டை தகர்ந்து விழ, மணமகனைப் பிணமகனாய்ச் செய்தார்கள் மாபாவிகள், மங்கை நல்லாள் கற்புக்கும் தீயிட்டனர் மதோன்மத்தர். அவர்களெல்லாம் ஆட்சி பீடப்பதுமைகளாய் இருக்கின்ற இந்த நாட்டுக்கு மணிவிழா ஒரு கேடா? மங்கள முரசம் ஒரு கேடா? மன்னர் மகள் நாட்டியம் ஒரு கேடா? தூ... தூ வெட்கக் கேடு.... வெட்கக்கேடு.*

*மன்னன்: இவ்வளவு உணர்ச்சிவசப்பட்டுத் துடிக்கிறாயே நீ யாரப்பா?*

*கதிரவன்: ஏழை சொல் அம்பலம் ஏறாது என்பீர்கள். நான் யாரென்று தெரிந்த பிறகாவது என் வார்த்தையை நம்புவீர்களா? என்று கதிரவன் கேட்கிறான்.*

இவ்வாறு ஆட்சியாளருக்கும் அவர்களின் கொடுங்கோல் மக்கள் விரோத ஆட்சிக்கும் எதிராக நெருப்பு மழையாக கலைஞரின் வசன மழை பொழிகிறது. அராஜக ஆட்சிக்கு எதிரான இது போன்ற அரசியல் வசனங்களை, கலைஞரைத் தவிர, வேறு எவராலும் இத்தனை உணர்வெழுச்சியுடனும் மொழி நயத்துடனும் எழுத முடியுமா என்று வியப்பாக உள்ளது.

**...காட்சி விரியும்**

---

## எருதுகளின் கழுத்துப்புண் நோவு காக்கைகளுக்குப் புரியாது!


ரவிச்சந்திரன் அரவிந்தன் என்பவர், தனது பெண் நண்பரைச் சந்தித்தபோது, அங்கு நடந்த உரையாடலை, சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அந்த உரையாடல், திராவிட மாடல் அரசு ஏற்படுத்தியிருக்கும் தனித்துவத் திட்டங்கள் ஏற்படுத்திய தாக்கத்தின் வீரியத்தை உணரச் செய்வதாக உள்ளது. இந்த 70 வயது பெண்ணின் கணவர் 10 ஆண்டுகளுக்கு முன்பே காலமாகிவிட்டார். தற்போது வேலைக்குச் செல்ல இயலாமல், நோய்வாய்ப்பட்டுள்ளார். அவரது மகள் மணவிலக்குப் பெற்று, தனது குழந்தையோடு, தாயையும் சேர்த்துக் கவனித்துக் கொள்கிறார். அவருக்கும் செலவு போக ஊதியத்தில், மிச்ச இருப்பு 5,000 ரூபாய்தான். ‘எப்படிக் குடும்பச் செலவுகளைச் சமாளிக்கிறீர்கள்’ என அவர்களிடம் கேட்டுள்ளார் ரவிச்சந்திரன் அரவிந்தன்.

“இருவருக்கும் மகளிர் உரிமைத் தொகை மூலம் மாதம் தலா ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. அரசு மருத்துவமனையில், எனக்கான எல்லா மருந்துகளும் இலவசமாகக் கிடைக்கின்றன. மகள் வேலைக்குப் போக பேருந்துக் கட்டணம் முன்பு தினசரி 50 ரூபாய் ஆனது, தற்போது அதுவும் மிச்சம். இவையெல்லாம் இல்லையென்றால், வாழவே முடியாது” என்று அந்தப் பெண்மணி கூறியுள்ளார்.

வீட்டு வேலை செய்யும் மற்றொரு பெண் ஒருவர், “காலை 7 மணிக்கே நானும் எனது கணவரும் வேலைக்குச் சென்றுவிடுவோம். பழைய சோறுதான் எங்கள் குழந்தைகளுக்குக் காலை உணவு. அதுவும் இல்லையென்றால், காபி மட்டும்தான். நேரடியாக மதியம் சத்துணவுதான் உண்பார்கள். ஆனால், இப்போது காலை உணவு வழங்குவதால், குழந்தைகள் பசியில் வாடிப்போவதில்லை” எனக் கூறியுள்ளார். இந்தத்திட்டங்களை விமர்சிப்போருக்கு ரவிச்சந்திரன் அரவிந்தன் தரும் பதில், ‘எருதின் கழுத்துப்புண் நோவு காக்கைகளுக்கு என்றுமே தெரிவதில்லை’.

---

## ஃப்ளாஷ்பேக்



### பூலாவாரி கிராமத்துக்கு அண்ணா வருகை!



எஸ். அன்பு ராஜேந்திரன்

என்னுடைய பெரியப்பா கே.பி.கணேசன் அவர்கள் மிசா காலத்தில் வீரபாண்டியார் அவர்களுடன் சிறை சென்றவர். 1957-ஆம் ஆண்டு முதல் 1977-ஆம் ஆண்டு வரை 20 ஆண்டுகள் வீரபாண்டி ஒன்றியக் கழகச் செயலாளராக இருந்து வீரபாண்டி ஒன்றியத்தை எஃகுக் கோட்டையாக மாற்றியவர். 1960-ஆம் ஆண்டு அன்றைய ஒருங்கிணைந்த சேலம் மாவட்டம், வீரபாண்டி ஒன்றியத்தில் உள்ள பூலாவாரி கிராமத்துக்கு, பேரறிஞர் அண்ணா அவர்கள் வருகை தந்து பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்றினார். உடன் சேலத்துச் சிங்கம் வீரபாண்டியார், என்னுடைய பெரியப்பா கே.பி.கணேசன் ஆகியோர் அண்ணாவுடன் இருந்தனர்.

**- எஸ். அன்பு ராஜேந்திரன்,**
**மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர்,**
**சேலம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

**கருவூலம்**

### கான்கிரீட் வீடுகள்!

1991-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 7 மற்றும் 8-ஆம் தேதிகளில் ‘நற்பணிப் பயணம்’ என்கிற பெயரில், வேலூர், செங்கல்பட்டு, திருவண்ணாமலை மாவட்டங்களுக்குப் பயணம் மேற்கொண்டார் முதலமைச்சர் கலைஞர். அந்தப் பயணத்தின்போது, 272 கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் கட்டப்பட்ட 4,600 கான்கிரீட் வீடுகளுக்கான உரிமைகளை, மக்களுக்கு வழங்கினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131